வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 54/2022

வழக்கு சாட்சி LW12/PW9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார், ஆய்வாளர் ஓய்வு | ஜாதி | |
| கணவர்/தந்தை | அரிச்சந்திரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 62 |

தேதி 28.10.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 BNSS பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஓய்வுப் பெற்று சொந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் 04.07.2017 ம் தேதி எம்1 மாதவரம் குற்றப் பிரிவில் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் அருள்செல்வன் என்பவரால் பதிவுச் செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு, 17.05.2017 அன்று மாண்புமிகு திருவொற்றியூர் குற்றவியல் நடுவர் அளித்த CMP. 554/2017 உத்தரவின் பேரில் சிறப்பு உதவி ஆய்வாளர் அருள்செல்வம் அவர்கள் 04.07.2017 அன்று புகார்தாரர் சர்வலிங்கம் அளித்த புகாரின் மீது மாதவரம் குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண் 1254/2017 ஆக இதச பிரிவு 417, 420 உடன் பிரிவு 34 பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். மேற்படி பதிவுச் செய்யப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கையினை விசாரணைக்கு அன்றைய தினமே சாட்சிகள் சர்வலிங்கம், இராஜேஸ்வரி, நடராஜன், தமிழ்செல்வி, சௌந்தர்ராஜ், போஜராஜ், ஜான்சன், சுகுமார், என்பவர்களை தனித்தனியாக விசார்ரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் எனக்கு கிடைத்த தகவலின் பேரில் 05.07.2017 ம் தேதி 11 மணிக்கு வாதி அடையாளம் காட்ட செல்வா நகர் சந்திப்பு அருகில் வைத்து எதிரி

குணசேகரன் என்பவரை காரணத்தைக் கூறி கைது செய்து சாட்சிகள் சாம்பசிவம், ராஜ்குமார் என்பவர்கள் முன்னிலையில் எதிரி எவ்வித அச்சுறுத்துமின்றி தானக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 11.05 மணி முதல் 11.45 மணி வரைப் பதிவுச் செய்து எதிரியை 12 மணிக்கு நிலையம் கொண்டுவந்து பின்னர் எதிரியை நீதிமன்ற காவலில் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சாட்சிகள் சாம்பவிசம், ராஜ்குமார் ஆகியோர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவுச் செய்தேன். மற்ற எதிரிகள் முன் ஜாமின் பெற்று பிணையில் இருந்து வருகிறார்கள். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து இதச பிரிவுகள் 417,420 உடன் பிரிவு 34ன் கீழ் இறுதி அறிக்கையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

2022ம் ஆண்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தோம் என்றால் இல்லை 2018 ம் ஆண்டே தாக்கல் செய்துவிட்டோம். எனது இறுதி அறிக்கையை குற்றவாளிகள் நால்வரும் ஏலச்சீட்டு நடத்தி புகார்தார்ரை ஏமாற்றி உள்ளார்கள் என கூறியுள்ளேன் என்றால் ஆமாம். சர்வலிங்கம் தவிர மற்ற நபர்கள் எவரும் ஏலச்சீட்டு நடத்தி எதிரிகள் ஏமாற்றினார்கள் என புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் அனைவரும் புகார்தாரருடன் பணிபுரிந்த நபர்கள் என்றால் சரியல்ல. இரசீதுகளில் கையொப்பம் ஏதும் செய்யவில்லை என்றால் சரிதான். ஏலச்சீட்டினை குறைந்தது 4 நபர்கள் நடத்த வேண்டுமென்றாலும் ஒருவர் அளித்த புகாரில் மட்டும் எவ்வாறு வழக்கு பதிவுச் செய்தேன் என்றால் மற்ற நபர்கள் யாரும் புகார் அளிக்க முன்வரவில்லை. எதிரிகள் ஏலச்சீட்டு நடத்தவில்லை என்றாலும் புகார்தார்ரை ஏமாற்றவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**